**1990 சுவ செரிய மன்றம்  - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

1990 சுவ செரிய மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கற்ற நிறுவனங்களிற்காக பரிந்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நடைமுறைகளிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கற்ற நிறுவனங்களிற்காக பரிந்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நடைமுறைகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 24 இல் சுகாதார அமைச்சு மற்றும் GVK EMRI லங்கா (பிறைவேட்) லிமிட்டட் உடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனம் மற்றும் | தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் உரிமைகளும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, முழு | இது தொடர்பில் பொறுப்பான தரப்பினருடன் கலந்தாலோசித்து சுவ செரிய |

| | | |
|---|---|---|
| 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவ செரிய மன்ற சட்டத்தின் 26 (இ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் சுவ செரிய மன்றத்தின் செயற்பாட்டிற்காக ஏற்பட்ட மீண்டெழும் செலவினங்கள் அரசாங்கத்தால் மீள்நிரப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தால் மீள்நிரப்பு செய்யப்படாத மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 330,091,526 ஆகும், மேலும் அந்தச் செலவினம் மூலதனச் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அதேபோல் 2019 ஆம் ஆண்டிற்காக மன்றத்திற்கு அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீட்டை 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 25 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 75 சதவீதம் வரை குறைப்பதற்கு 2019 ஆகஸ்ட் 27 இல் அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்ட பின்னர் மன்றத்தை பேணுவதற்கு முன்மொழிவொன்று மேற்கொள்ளப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. எனினும் 2022 மே 26 வரையிலும் அத்தகைய முன்மொழிவு எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் இந்த நிலைமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக நேரடி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | கிரயத்தையும் தொடர்ந்து மீள்நிரப்பு செய்யாமல் வினைத்திறனான செயற்பாட்டை அமுல்ப்படுத்துவதில் உள்ள சிரமங்கள் வலியுறுத்தப்பட்டன, 2019 ஆகஸ்ட் 27 இல் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் விஜயமொன்றிற்கு $ 2 ஐ அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கத்தில் மாற்றங்கள் மற்றும் அமைச்சுக்களின் மாற்றங்கள் காரணமாக இது நடைமுறைப்படுத்தப்படவில்லை, மேலும் கொவிட் 19 நெருக்கடியின் போதும் அதற்கு முன்னரும் பொதுமக்களுக்கு ஆற்றிய சேவையை கருத்தில் கொண்டு அமைச்சரவை தீர்மானத்தை மாற்றியமைத்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | மன்றத்தை தடையின்றி பேணுவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்று தாபிக்கப்பட வேண்டும். |

## 1.6 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப் படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அம்புலன்ஸ் சேவை கட்டணங்கள் மற்றும் | 159,640,275 | மூல விலைப்பட்டியல்கள் | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் போது | அனைத்து கொடுப்பனவுகளிற்கும் மூல விலைப்பட்டியல்கள் |

| | | | |
|---|---|---|---|
| பல்வேறு தரப்பினருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | வெளிமாவட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவு தொடர்பான மூல விலைப்பட்டியல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை, நாடளாவிய ரீதியில் சேவை மையங்களில் அம்புலன்ஸ் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் குறித்த விடயத்தை தீர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 2008 சனவரி 01 இன் 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட ஏதேனும் காசுப் பெறுவனவுகள் அல்லது கொடுப்பனவுகள் விடயத்தில் ரூபா 25 முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 707 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 550,539,511 தொகையான கொடுப்பனவுகளிற்கு மன்றம் முத்திரைக் கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை. | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளிற்கும் முத்திரைக் கட்டணத்தை கழிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டுள்ளன. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 139(5) | உறுதிச்சீட்டுக்களின் கொடுப்பனவின் போது பணம் செலுத்துபவரின் அடையாளம் இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 6,464,100 தொகைக்கான 07 உறுதிச்சீட்டுக்களின் கொடுப்பனவின் போது உறுதிச்சீட்டின் மீது பணம் பெறப்பட்டதை | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும், கொவிட் தொற்றுநோய் காலத்தில் பெறுநர் பல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் கையொப்பமிட்டிருக்காததுடன் குறித்த காலப்பகுதியில் பயணக் கட்டுப்பாடுகள் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்புக்கொண்டமைக்கான பணம் பெறுபவரின் கையொப்பம் அல்லது அதை உறுதிப்படுத்துவதற்கான பெறுவனவுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை. | இருந்ததால், பொதுமக்கள் வருகை குறைவாகவே இருந்தது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவரிற்கு கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 2.00 வீதம் வழங்கப்படக்கூடிய போதிலும் அம்புலன்ஸ் சேவையை மேற்பார்வை செய்வதற்கு மாவட்ட அளவில் நிறுத்தப்பட்டுள்ள மேற்பார்வை உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட மோட்டார் சைக்கிள்களை கள ஆய்வுக்காக பயன்படுத்துவதற்கும், அவ் ஏற்பாடுகளிற்கு முரணாகவும் நிர்வாக பணிப்பாளர் நாயகத்தின் முறையான அங்கீகாரம் இன்றியும் மன்றத்தால் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 18 வீதமும் 2021 யூலை 18 முதல் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 23 வீதமும் செலுத்துவதற்கும் பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 131 சந்தர்ப்பங்களில் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 18 வீதம் ரூபா 3,897,216 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் 2021 யூலை முதல் 63 சந்தர்ப்பங்களில் கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 23 வீதம் ரூபா 2,466,674 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | மாவட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கள ஆய்வுகளில் தங்கள் சொந்த வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர், தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய ஆய்வுகளுக்கு எரிபொருள் படி அவர்களிற்கு செலுத்தப்படுவதில்லை, கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 2 வீதம் செலுத்துவது நடைமுறையில் இல்லை, மாவட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களிற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் எரிபொருள், காப்புறுதி, ரயர்கள், பட்டரிகள், பராமரிப்பு போன்ற செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கிரய சேமிப்பைக் கருத்தில் கொண்டு பிரயாணப் படியாக கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 23 கொடுப்பனவை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்யெதுடன் நிர்வாகப் பணிப்பாளர் நாயகத்தின் முறையான அங்கீகாரமின்றி அத்தகைய படிகள் செலுத்தப்படக்கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பி௱டி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | செயலாற்றல் அறிக்கைகள் காலாண்டு ரீதியாக தயாரிக்கப்பட்டு உரிய அமைச்சு மற்றும் திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் மன்றம் அவ்வாறு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டல் | பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகளுக்கு எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும் மன்றத்தால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறுகை தேவைப்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாலும், 2022 ஆம் ஆண்டில் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லாததாலும், மேலும் நிலையான பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் அவசர கொள்வனவுகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதாலும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 51,365,905 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,443,011 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 54,808,916 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மன்றத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான செலவினங்கள், எரிபொருள் செலவினங்கள், பிரயாணம் மற்றும் ஏனைய படிகள், அம்புலன்ஸ்களுக்கான விநியோக செலவினங்கள், ஊழியர்களின் நலன்புரி மற்றும் அலுவலக நுகர்வுப்பொருட்களுக்கான செலவினங்கள் மற்றும் உள்ளூர் பிரயாணச் செலவினங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் நிதி குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இருபத்தைந்து அம்புலன்ஸ்கள் சுவ செரிய மன்றத்தின் பெயரில் 2021 திசெம்பர் 30 இல் பதிவு செய்யப்பட்டு அடையாளமாக மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், அம்புலன்ஸ்களில் தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் அல்லது வேறு எந்தத் தேவைப்பாடுகளையும் கருத்தில் கொள்ளாமல் குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட சேவைகளுக்கு ஏற்றவாறு அம்புலன்ஸ்களை மேம்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 49,250,000 கிரயம், திறைசேரியால் வழங்கப்பட்டிருக்காததால் குறித்த 25 அம்புலன்ஸ்கள் 2022 மே 26 வரையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் வழங்குநரின் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ளன. எனவே, அம்புலன்ஸ்களின் உத்தரவாதக் காலம் அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பே காலாவதியாகும் அபாயம் உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் அம்புலன்ஸ் பதிவு சான்றிதழின் பிரகாரம் இறக்குமதி வரியில் இருந்து அவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ள போதிலும் அம்புலன்ஸ் ஒன்றின் விற்பனை விலை ரூபா 15,950,00 என்பது ஒரு அசாதாரண நிலைமையாகும். | அந்த அம்புலன்ஸ்கள் மன்றத்தின் எந்த வேண்டுகோளும் இன்றி வழங்கப்பட்டதாகவும், அம்புலன்ஸ்கள் முன் மருத்துவமனை பராமரிப்பு சேவைகளுக்கு ஏற்றவாறு மேம்படுத்தப்பட வேண்டும் என்றும், அவற்றை நியமத்தரத்திற்கு மேம்படுத்துவதற்காக மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் பல தடவைகள் அதற்கான நிதியேற்பாடுகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் குறித்த நிதியேற்பாடுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், இந்த அம்புலன்ஸ் வாகனங்களை முன் மருத்துவமனை பராமரிப்பு சேவைகளிற்கு ஏற்றவாறு மேம்படுத்தாமல் இயக்க முடியாது எனவும் திறைசேரி மற்றும் அமைச்சுக்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சுடன் கலந்துரையாடி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தின் அவசர மருத்துவ அனுப்புனர் (Dispatcher) பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களின் எண்ணிக்கை 80 ஆகவும் குறித்த பதவிக்கான ஆரம்ப அடிப்படை சம்பளம் ரூபா 35,000 ஆகவும் இருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பதவியணியினரின் எண்ணிக்கை 38 ஆக காணப்பட்டதுடன் வெற்றிடங்களிற்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, 2021 செப்தெம்பர் 24 முதல் அமுலுக்கு வரும் வகையில், மாதமொன்றிற்கு ஒவ்வொன்றும் ரூபா 48,500 கொடுப்பனவு அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தனியார் கம்பனியொன்றின் 50 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரையான 03 மாத காலத்திற்காக ரூபா 10,094,752 தொகை அவர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. | பெறுகைக் குழு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வெளியில் இருந்து பெறப்பட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை, கொவிட் 19 இன் செயற்பாடுகள் காரணமாக நாளொன்றுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியிருந்தமை, பதவியணியினர் வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தமை மற்றும் கூட்டாளிகளின் தனிமைப்படுத்தல் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அவசர மருத்துவ அனுப்புநரின் அடிப்படை சம்பளம் ரூபா 35,000 மற்றும் அவர்கள் 12 மணிநேரம் சேவையில் ஈடுபடுவதால் அவர்களின் சராசரி மொத்த சம்பளம் ரூபா 55,000 ஆக இருப்பதாலும் உத்தியோகத்தர்கள் பெறப்பட்ட கம்பனிக்கு செலுத்தப்படும் தொகை அவசர மருத்துவ அனுப்புநர்களின் மொத்த சம்பளத்தை விட குறைவாக உள்ளதாலும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | இந்த ஆட்சேர்ப்புகளுக்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | உயர் முகாமைத்துவ பதவியான நிதித் தலைவர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் 2021 செப்தெம்பர் 02 இல் | நேர்முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்ட போதிலும் தகுதியான உத்தியோகத்தர் இல்லாத காரணத்தினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒரு வருட | இந்த ஆட்சேர்ப்புகளுக்கு முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். ஒரு வருடத்திற்கும் மேலாக காலியாக உள்ள இந்தப் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு 2022 மே 26 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆட்சேர்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் நிதித் தலைவர் மற்றும் ஏனைய இரண்டு பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவியை மாற்றி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலத்திற்கு ஆலோசனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் வேகமாக மாறிய தொழிலாளர் சந்தைக்காக ஆட்சேர்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் இந்தப் பதவிகள் மாற்றப்பட்ட போதிலும் அவை அங்கீகரிக்கப்பட்ட தரங்கள் மற்றும் சம்பளத்தில் வைக்கப்படும் பதவிகளாக காணப்படுகின்றன. | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் இராஜாங்க அமைச்சின் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய பிஎவ்டி/ஆர்ஈடி/01/04/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால தூரநோக்குடன் தொடர்புடைய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றம் அதற்கிணங்க செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக மன்றம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2019 சனவரி 12 ஆம் திகதிய டிஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் மன்றத்திற்காக உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டிருக்காததுடன் உள்ளக கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இக்கோரிக்கை தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், இக்கோரிக்கை தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2022 ஆம் ஆண்டில் அமைச்சின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரை எவ்வித பதிலும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சுவ செரிய மன்றம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” பற்றி அறிந்திருக்கவில்லை. எனவே, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள் தொடர்பான இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான மைய புள்ளிகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உதவுவதே மன்றத்தின் முக்கிய நோக்கமாகும், மேலும் அந்த குறிகாட்டிகள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |